புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# தமிழிலக்கியங்களில் காணலாகும் பகுத்துண்ணும் பண்பாடு

சி. ஜோதிலட்சுமி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த் துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635 601

ஆய்வுச்சுருக்கம்

பழந்தமிழர்களிடம் காணலாகும் பண்பாடுகளில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுவது பகுத்துண்ணும் பழக்கமாகும். இப்பழக்கம் நம் தமிழர்களின் உதிரத்திலே கலந்துள்ளது. இவற்றை நினைவுப்படுத்தும் விதமாக பல்வேறு இலக்கியங்களில் காணப்படுவதை எடுத்துக்காட்டியுள்ளன. பழந்தமிழர்கள் தங்களிடம் உள்ள கூழை பகுத்துண்டால் இனிமையாக இருக்கும் தனிமையில் உண்டால் அமிழ்தமே கசக்கும் என்று மக்கள் கருதினர். இவற்றின் அடையாளமாக ஈகை, விருந்தோம்பல் பண்பு, கொடைத் தன்மை, கூட்டுண்ணல், பகுத்துண்ணல் போன்றவை வேட்டைச் சமூகத்திலிருந்தே பகுத்துண்ணும் பழக்கம் இருந்து வருவதை அறியமுடிகிறது. ஆனால் இன்றைய சமூகத்தில் நாகரீகம் என்ற பெயரில் பகுத்துண்ணும் பழக்கம் குறைந்து வருகிறது. இதனை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மறைந்துக்கொண்டிருக்கின்ற இப்பழக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு நல்ல பண்பாளனாக உருவாக்க முடியும் என்று இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

கலைச் சொற்கள்

பண்பாடு, பகுத்துண்ணல், ஈகை, விருந்தோம்பல், மட்டுவாய், கள், ஊன்சோறு, அமிழ்தம் போன்றன கலைச்சொற்களை இக்கட்டுரையில் பயன்படுத்தியுள்ளேன்.

## முன்னுரை

தமிழ் மக்களின் தொன்மையை எடுத்துக் கூறும் இலக்கியப் பெட்டகமாகத் திகழ்வதுதான் சங்க இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளைப் பற்றியும் ஈகை, கொடைத்தன்மை, பகுத்துண்ணும் பழக்கம், கூட்டுண்ணல், பகுத்துண்ணல், விருந்தோம்பல் என்று ஏராளமான பண்பாட்டு முறைகளை எடுத்தியம்புகின்றன. பழந்தமிழர்களின் உதிரத்தில் ஊறிப்போன பண்பாடாகத் திகழ்கிறது. இப்பண்பாட்டினைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையவுள்ளது.

## பண்பாடு

பண்பாடு என்பது பண் – பண்படு – பண்பாடு என்று மாற்றமடைந்துள்ளது. இவ்வுலகில் உழவுத் தொழினைச் செய்யும் உழவன் நிலத்தில் பயிரை விளைவிப்பதற்கு பலமுறை உழுது பண்படுத்துவதுபோல மனிதன் தன்னிடம் நல்ல பண்பினை வளர்த்துக்கொள்ள ஐம்புலன்களின் உணர்வாலும், கல்வி அறிவாலும், ஒழுக்கத்தாலும், மனிதன் பண்படுவதால் வாழ்க்கையில் சிறந்த மனிதனாக வாழ்வதற்கு பண்பாடு மிகவும் உறுதுணையாக இருப்பதை விளக்கும் வகையில் சிலவற்றைக் காண்போம்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"[1] கலித் - 16

என்று கலித்தொகை பண்பாட்டிற்கு இலக்கணம் வகுக்கிறது. மேலும்

" பயனும் பண்பும் பாடறிந்து ஒழுகல்"[2] நற் - 160

எனும் பாடலடிகள் பண்பாட்டின் அவசியத்தை நற்றிணைப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வதுமன்"[3] குறள் - 996

என்று திருக்குறளில் மக்களிடையே பண்பாடு மிகுந்துக் காணப்படுவதால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இல்லையென்றால் உலகம்மண்ணிற்குள் சென்று அழிந்துவிடும் என்று பண்பாட்டின் பெருமையை வள்ளுவன் அன்றே சொல்லிச் சென்றுள்ளான்.

தொல்காப்பியத்தில் பாதீடு

பகுத்துண்ணும் பழக்கத்தினை தொல்காப்பியர் காலத்தில் பாதீடு என்று புறப்பொருள் இலக்கணத்தில் கூறியுள்ளார்.

"தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடை என "[4] தொல் பொருள் . 12

எனும் தொல்காப்பிய நூற்பாவில் தன் நாட்டினை விரிவுப்படுத்தும் நோக்கில் பகைவர் நாட்டில் கொள்ளையடித்துக்கொண்டு வந்த ஆநிரைகளை தத்தமக்கு தகுதிக்கேற்ப செல்வமாகக் கருதுகின்ற ஆநிரைகளை பகிர்ந்துக் கொடுத்தனர் என்று செய்தியை அறியலாம். மேலும் புறப்பொருள் வெண்பாமாலையிலும்,

"கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநிரை
அவர்அவர் வினை வயின் அறிந்துஈந் தன்று"[5] புறப். பொருள்.

எனும் நூற்பாவில் கொள்ளையடித்த ஆநிரைகளை தானே வைத்துக்கொள்ளாமல் அவற்றை அவரவர் வினையின் பொருட்டு பகிர்ந்துக் கொடுத்துள்ளனர். இதனை பாதீடு அல்லது பங்குகொடுத்தல் அல்லது கூட்டுண்ணல் என்றெல்லாம் கூறுகின்றனர்.

திருக்குறளில் பகிர்ந்துண்ணல் பண்பு

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவறறுள் எல்லாம் தலை"[6] குறள் - 322

உண்டு உயிரிவாழ்ந்தால் சிறப்பாகாது. அதனை பசியால் வாடும் மக்களுக்குக் கொடுத்து பசியைப் போக்குவதன் மூலம் ஒரு உயிரைக் காத்த புண்ணியத்தைப் பெற முடியும் என்ற அறச்செயலை மக்களுக்கு எளிமையான முறையில் பகுத்துண்ணும் முறையினை எடுத்தியம்புகிறார்.

மக்களின் கடமைகளில் ஒன்றான கூட்டுண்ணல்

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"[7] குறள் - 734

பசி என்பது மிகவும் கொடுமையானது. அதனால் மக்கள் ஒவ்வொருவரும் தங்களின் கடமையாக நினைத்துப் பசியால் வாடும் ஏழைகளின் பசியைப் போக்கினால் நாடடில் பசி என்பதை அறவே போக்க முடியும் என்று வள்ளுவர் பகிர்ந்துண்ணுவதால் ஏற்படும் நன்மையை மக்களுக்கு எளிமையாக கூறிச்செல்கிறார்.

அகநானூற்றில் கூட்டுண்ணல்

"மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளன்கெழு தொண்டி அன்ன அவள் நலனே"[8] அகம் - 10 - 12

இப்பாடலில் நெய்தல்நிலத் தலைவன் பழைய படகுகளை சரிசெய்துக் கொண்டு அருகிலுள்ள கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து அங்குள்ள மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் தலைவனே ஆனால் தலைவியின் மனதை புரிந்துக்கொண்டு விரைவில் மணந்துகொள் என்று அறிவுறுத்தும் விதமாக இப்பாடல் உணர்த்துகிறது.

புறநானூற்றில் விருந்தோம்பல

"ஊர் அருமிளையதுவே மனைவியும்
வேட்டைச் சிறாஅர் சேட்புலம்படராது
படுமடைக் கொண்ட குறுநுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந்தயரும் விரும்பினள்"[9] புறம் 326 ; 7 - 12

இப்பாடல் தலைவியும் வேட்டுவச் சிறுவர்களும் அருகிலிருக்கும் கடற்கரைக்குச் சென்று அங்கு உடும்பைப் பிடித்துக் கொண்டு வந்து சமைத்து தன்னைநாடி வரும் பாணர்களுக்கும் விருந்தினர்களுக்கும் பகிர்ந்து விருந்தளிக்கும் பண்பாட்டை நம்மால் அறிய முடிகிறது. மேலும்,

"படலை முன்றில் சிறுதினைஉணங்கல்
புறவும்இதலும் அறவும் உண்களனப்
பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனால்
முயல்சுட்ட ஆயினும்தருகுவேம் புதுதந்து
ஈங்கு இருந்து ஈமோ முதுவாய்ப் பாண"[10] புறம்319 ; 5 - 9

என்று நீண்ட பயணம் செய்வோருக்கும் தெரிந்தவர் தெரியாதவர என்று பார்க்காமல் தன் வீட்டிற்கு வரும் அனைவருக்கும் வேட்டையாடிய விலங்கின் தசையை சோற்றோடு விருந்தளிக்கும் வழக்கம் வேட்டைச் சமூகத்திலிருந்தே இருந்து வருவதைப் பார்க்கமுடிகிறது.

" மான்அதள் பெய்த உணங்குதனை வல்சி
கானக் கோழியொடு இதழ்கவர்ந்து உண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவுஆர்ந்திட்ட முழுவள் ளூரம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு இனிது அருந்தித்
தங்கினை செம்மோ பாண தங்காது"[11] புறம் 320 ;10 - 15

இப்பாடலின் வாயிலாக பாணனைப் பார்த்து தலைவி மான்தோலில் பரப்பி உலர வைத்ததினை அரிசியையும், காட்டுக்கோழியும், மற்ற பறவைகளும்கூடி வந்துஉண்பது போல, நீயும் உன் சுற்றமும் சந்தன மர நெருப்பில் சுட்ட ஆரல் மீனையும், இறைச்சியையும் உண்டு செல்லுங்கள் என்று விருந்தொம்பலைதலைவிகூறுவதிலிருந்து தலைவியிடத்துக் காணப்படும் விருந்தோம்பலை அறிய முடிகிறது.

அதியனின் விருந்தோம்பல் பண்பு

"சிறியகட் பெறினே எமக்கு ஈயும் மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே
சறுசோற்றானும் நனிபல களத்தன மன்னே
பெரும்சோற்றானும் நனிபல கலத்தன மன்னே
எனபொடு தடிபடு வழி எல்லாம் எமக்ஈயும் மன்னே"[12] புறம் 235 ; 1 - 6

ஔவையார் பாடிய இப்பாடலில் அதியமானின் விருந்தோம்பல் பண்பினை விளக்குகிறார். சிறிய அளவில் மது கிடைத்தால் அதை எங்களுக்கே தந்துவிடுவான். அதிகமாகக் கிடைத்தால் அதை எங்களுக்குக் கொடுத்து மீதியை அவனும்உண்பான். இதிலிருந்து தெரிந்துக்கொள்வது மற்றவர்கள் உண்பதைப்பார்த்து மகிழ்ச்சிக் கொள்வதை நம்முடைய தமிழர்களிடம் காணமுடிகிறது.

கையறுநிலையிலும் விருந்தோம்பல் பண்பாடு

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு அன்று ஆனாது எழும் கொழுந்துவை
ஊன் சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னை இனியே"[13] புறம் 113 ; 1 - 4

பாரியின் பறம்பு பறம்புமலை மிகவும் வளமானது எப்பொழுதும் பாரியின் கதவு பாணர்களுக்காக திறந்தே இருக்கும் சாடி நிறைய கள்ளும், ஆட்டுக்கிடாயின் இறைச்சியும் கொடுத்துக்கொண்டே இருப்பான் .அவன் இறந்தப்பிறகு பறம்பு மலை பாணர்களுக்கு விருந்து அளிக்க யாருமில்லாமல் தவிப்பதை காணமுடிகிறது

குடும்ப மகளிரின் விருந்தோம்பல் பண்பாடு

"... ... மனையோள்
பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்
ஊன் ஒலி அரவமொடு கைதூவாளே
பரிசில் பரிசிலர்க்கு ஈய
உரவேல் யானையும் கைதூவாளே"[14] புறம் 334 ; 5 -10

வீட்டில் உள்ள தலைவி தலைவனுக்கு இணையாக இரவலர்க்கு உணவு சமைத்து வழங்கும் தன்மையுடையவளாகத் திகழ்ந்திருப்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

இந்திர உலகில் உள்ள அமிழ்தமே கிடைத்தாலும் அதை தனித்தே உண்ணாமல் அனைவருக்கும் கொடுத்து உண்ணும் பண்பினை உடையவர்கள் நம்முடைய தமிழர்கள். இதேபோன்று

அதியமான் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியை நீண்டநாள் வாழும் தன்மைக் கொண்ட கனியை ஔவையாருக்குக் கொடுத்து தமிழருடைய இயல்பான பண்பாட்டை உணர்த்தினார்.

மணிமேகலையில் விருந்தோம்பல்

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டிகொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே"[15]

மனித வாழ்க்கைக்கு அடிப்படையான தேவைகளுள் முதன்மையானது உணவாகும் அந்த உணவினைக் கொடுத்தவர்கள் உயிர்க் கொடுத்தவர்கள் ஆவார்கள். இதன் மூலம் உணவு கொடுப்பது உயர்ந்த பண்பாடாக உள்ளதை அறியலாம்.

பகிர்ந்துண்ணலின் அவசியம்

"பகிர்ந்து உண்டால் கூழும் இனிக்கும்
தனியே உண்டால் விருந்தும் கசக்கும்"[16]

சாகா மருந்தாக இருந்தாலும் விருந்தினரை விடுத்து உண்ணுதல் மறுக்கும் வள்ளுவத்தின் வழிநின்று இறையன்பு பேசுகையில் எந்த உணவுக்கும் சுவை என்பது உணவில் இல்லை. உணவைத் தருவதில்தான் இருக்கிறது. உண்ணுதல் என்பது தனித்த செயலாக இல்லாமல் கூட்டுச் செயல்பாடாக நிகழ வேண்டும் என்பது கவிஞரின் விருப்பமாக உள்ளது.

"அன்பினால் கொடுத்தால்
எச்சிலும் அமிர்தம்
உண்மைமயால் அளித்தால்
நஞ்சும் ஔடதம்"[17]

குழந்தை முதலே அனைவரிடமும் பகிர்ந்து உண்ணுதலை கற்றுக் கொடுக்க வேண்டும் இதுவே தமிழரின் தலையாய பண்பாடுகளில் ஒன்றாகும்.

நிறைவாக

மனிதன் தோன்றிய பின்னர் வேட்டைச் சமூகம் உருவானதலிருந்தே பண்பாடு என்ற ஒன்று தோன்றிவிட்டது. இப்பண்பாடுகளில் மிகவும் முக்கியமானது பகிர்ந்துண்ணலாகும். இப்பகிர்ந்துண்ணலின் மூலம் மக்களிடையே ஒற்றுமை உணர்வையும் விருந்தோம்பலின் இன்றியமையாமையையும் அறிந்துக் கொள்ள முடிகிறது. பல்வேறு இலக்கியங்கள் வாயிலாக சுவையான உணவாக இருந்தாலும் தனியே உண்ணாமல் அனைவருடனும் பகிர்ந்துண்டால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதை இக்கட்டுரை உணர்த்துகின்றது.

அடிக்குறிப்புகள்


1. சுப்பிரமணியன் சா.வே. கலித்தொகை மூலமும் உரையும் ப - 34
2. சுப்பிரமணியன் சா.வே. நற்றிணை மூலமும் உரையும் ப - 56
3. வரதராசன் மு, திருக்குறள் தெளிவுரை ப - 203
4. திருஞானசம்பந்தம் ச, தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப - 49
5. திருஞானசம்பந்தம் ச, புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும் ப - 25
6. வரதராசன் மு, திருக்குறள் தெளிவுரை ப - 67
7. மேலது ப - 151
8. சுப்பிரமணியன் சா.வே. அகநானூறு மூலமும் உரையும் ப - 45
9. மாணிக்கவாசகன் ஞா புறநானூறு மூலமும் உரையும் ப - 419
10. மேலது ப - 410
11. மேலது ப - 411
12. மேலது ப - 324
13. மேலது ப - 160
14. மேலது ப - 428
15. சுரேஷ் கோ, இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள் ப - 24
16. இறையன்பு வெ, சருக்குமரம் ப - 44
17. மேலது ப - 8


********* ********* ********** ********* ********* ********** ********** **********